# மேட்டுப்பாளையம் நகராட்சி

.10.2020ம் தேதி கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் மூன்று குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பழைய மற்றும் கூட்டு குடிநீர்த் திட்டங்களில் நீரேற்றம் செய்யப்படும் குடிநீரில் அளவு மணி இல்லாததால் நீரேற்றம் செய்யும் குடிநீரை அறிய முடியவில்லை ஆதலால் இரண்டு திட்டங்களுக்கும் அளவுமானி மீட்டர் ( Meter) பொருத்த ஆணையரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>தலைமை நீரேற்று நிலையத்தில் பழைய குடிநீர்த் திட்டத்தில் யூனிட் எண்.1 30 Hp கடந்த 01.10.2020 அன்று இயங்கிக் கொண்டிருந்த போது அதிக இரைச்சலுடன் நின்றுவிட்டது. பம்பைப் பிளந்துப் பார்த்த போது பம்பில் ஷாட்டு தேய்ந்தும் , புஸ்கள், பேரிங்குகள் உடைந்து இருந்தது தெரிய வந்தது. இரண்டு பம்புகள் உள்ள இடத்தில் ஒன்று பழுதானதால் மற்றொன்று தொடர்ந்து இயக்க வேண்டியுள்ளது. அதிலும் ஏதாவது பழுது ஏற்பட்டால் குடிநீர் விநியோகம் மாற்றி இயக்க ஆணையரின்அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>தலைமை நீரேற்று நிலையத்திற்குத் தேவையான உதிரிச்சாமான்கள், பேரிங்குகள், பேக்கிங் ரோப்புகள் CID ஜாயின்டுகள், சுலின் வால்வுகள் மற்றும் DI பைப்புகள் அவ்வப்போது உடைப்பு ஏற்பட்டால் மாற்றுவதற்கு தேவையான சாமான்கள் வாங்க ஆணையரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>கே.கே.நகர் மேல் நிலைத் தொட்டியில் உள்ள 15 Hp மோட்டார் தினமும் 24 மணிநேரமும் இயக்கக் கூடியது . அதில் உள்ள N.R.V.C (Non Retion value) பழுதானதால் மோட்டார் இயங்க முடியவில்லை உள்ள 250mm சுலில் வால்வு மாற்றவும் ஆணையரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>பங்களாமேடு நீரேற்று நிலையத்தில் 5.40 லட்சம் கொண்ட G.L.S.R ல் டெலிவரி 300mm சுலில்வால்வில் ஸ்டாண்டில் ராடு மற்றும் சேக்நட் பழுதானதால் இயக்க முடியவில்லை. ஆதலால் பழுதான ஸ்டாண்டில் ராடு மற்றும் சேக்நட் மாற்றுவதற்கு ஆணையரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>மேற்கண்ட அ,ஆ,இ,ஈ,உ அனைத்து பணிகளும் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 8,00,000/–க்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விலைப்பட்டியல் படி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : 1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. குடிநீர் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம். |

2 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பாதாள சாக்கடை இணைப்பிற்கான வைப்பு தொகை மற்றும் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்ட விபரம் 07.10.2020 ஆகும் தேதிய தினமலர் நாளிதழில் அறிவிக்கப்பட்டது. மேற்படி நிர்ணயம் செய்யப்பட உள்ள கட்டணம் மற்றும் வைப்புத்தொகை அதிகம் எனவும் அதனை குறைக்க கோரியும் ஆட்சேபனை தெரிவித்துள்ளதற்கு கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வழங்கப்படுகிறது.

இந்நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த அரசாணை எண்.389 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 09.09.2016ன்படி பாதாள சாக்கடைத் திட்டம் ரூ.91.70 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பாதாள சாக்கடைத் திட்டம் கீழ்க்கண்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

| விபரம் | தொகை (ரூ.கோடியில்) | சதவீதம் |
|---|---|---|
| TNUDF KFW assisted SMIF–TB–II–2 நிறுவனத்திடமிருந்து பெறப்படும் கடன் | 18.34 | 20% |
| PSGF under KFW assisted/KWF GF–I நிறுவனத்திடமிருந்து பெறப்படும் மான்யம் | 64.19 | 70% |
| நகராட்சி பங்குத் தொகை | 9.17 | 10% |
| மொத்தம் | 91.70 | 100% |

மேற்படி பணிகள் நடைபெற நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.9.17 கோடியுடன் கூடுதல் விலை விகிதத்தால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.6.31 கோடி ஆக மொத்தம் ரூ.15.48 கோடி தேவைப்படுகிறது.பாதாள சாக்கடை திடடப்பணிகள் துவங்கப்பட்டு இரண்டு ஆண்டிற்கு மேல் ஆகி உள்ள நிலையில் தற்போது சாலை சீரமைப்பு பணி ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் கூடுதல் மத்திய மாநில சேவை வரி நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலை,ரயில்வே ஆகிய துறைகளுக்கு சாலை சீரமைப்பு கட்டணம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தரப்படுத்தப்பட்ட விலை விவரப் பட்டியலில் ஏற்படும் வித்தியாச தொகை, தொழிலாளர் நலநிதி இவைகளின் காரணமாக கூடுதலாக செலவு ஏற்படும் நிலை உள்ளது.

எனவே நகர்மன்றத் தீர்மானத்தில் உள்ள வைப்புத் தொகையினை குறைக்கும் பட்சத்தில் மேற்படி பணியினை செயல்படுத்த சிரமம் ஏற்படும்.மேற்படி திட்டம் செயல்படுத்தும் நிலையில் அதனை பராமரிக்க ஆகும் செலவினத்திற்கு தற்போது நிர்ணயித்துள்ள மாதாந்திர கட்டணம் போதுமானதாக இல்லையெனினும் மக்களுக்கு கூடுதல் பளு இல்லாத வகையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானம் வாயிலாக நிர்ணயிக்ககப்பட்ட பாதாள சாக்கடை இணைப்புகளுக்கான வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர கட்டணம் ஆகியவற்றை குறைக்க இயலாது எனவும் மற்றும் வழிபாட்டு தலங்களுக்கு இலவசமாக இணைப்புகள் வழங்க வழிவகையில்லை என்ற விவரத்தினை பொது மக்கள் மற்றும் மனு அளித்தவர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுவிட்டது. மேலும் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிவடைந்த பின்பே பொது மக்களுக்கு வழங்கப்படும் இணைப்புகளுக்கு வைப்புத் தொகையினை பெறவும் மாவட்ட அரசிதழில் பிரசாரம் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.1819/2016/இ1

3 இந்நகராட்சியில் 2019 – 2020 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி பணிகளின் விவரத்தினை மக்கள்குரல் நாளிதழில் Newsmen Associates Limited நிறுவனம் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டதற்கு தொகை ரூ.28350/–ஐ வழங்ககோரி Newsmen Associates Limited விளம்பர நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகையினை Newsmen Assocciates Limited நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : அனுமதிக்கலாம்
ந.க.எண்.2072/2020/இ1

4

மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் 2020 –21ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 28.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1 | தலைமை நீரேற்று நிலையத்திற்கு தேவையான பவர் கெப்பாசிட்டர் வாங்குதல் | ரூ.1.50 இலட்சம் | திருவாளர். அல்கம் இன்டஸ்ட்ரீஸ் | ரூ. 1,33,712.00/– + GST 12% |
| | | | திருவாளர்.ஆர்.வி. எலக்ட்ரிக்கல்ஸ் | ரூ. 1,35,040.00/– + GST 12% |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். அல்கம் இன்டஸ்ட்ரீஸ் அவர்களின் பணியை ஏற்று பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.4022/2020/இ1

5

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN40 0986க்கு பழுது பார்க்கும் பணிக்கு கடந்த 29.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர். முருகன் ஆட்டோஸ், ஈரோடு | ரூ.2,61,500/– |
| 2 | திருவாளர். ஸ்ரீ பாக்கியலட்சுமி ஒர்க்ஸ், ஈரோடு | ரூ.2,49,300/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ஸ்ரீ பாக்கியலட்சுமி ஒர்க்ஸ், ஈரோடு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1454/2020/எச்1

6

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் TN40 0551க்கு டயர்கள், டியூப் மற்றும் பிளாப்கள் புதியது மாற்றம் பணிக்கு கடந்த 29.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர். ரமேஷ் ஏஜென்சிஸ், மேட்டுப்பாளையம் | ரூ.61,700/– |
| 2 | திருவாளர். Rishab எண்டர்பிரைசஸ், மேட்டுப்பாளையம் | ரூ.62,000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள திருவாளர் ரமேஷ் ஏஜென்சிஸ், மேட்டுப்பாளையம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3672/2020/எச்1

7

மேட்டுப்பாளையம்ம நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 11 மகாதேவபுரம், சத்தியமூர்த்தி நகர், யுனைடெட் பிளிச்சிங் கம்பெனி பின்புரம் ஆகிய இடங்களில் உள்ள மின்கம்பங்களை இடமாற்றம் செய்வதற்கு மின்வாரியத்தால் ரூ. 155900/–ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதை பெறப்பட்டது. எனவே, மேற்படி தொகையினை மின்வாரியத்திற்கு ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : அனுமதிக்கலாம்
ந.க.எண்.294/2020/இ1

**8**

மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள பகுதியில் ஊடிஎனை/19 தொற்று நோய் பரவி வருவதை அடுத்து தொற்று நோய் உறுதி செய்யப்பட்ட நபர்கள் வசிக்கும் பகுதிகளை மாநில அரசு மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின் பெயரில் அப்பகுதிகளை தடை செய்து அப்பகுதிகள் மற்றும் வீடுகளை தனிமைப்படுத்தி மக்கள் நடமாடத்தை கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. இத்தடுப்பு பணிகள் அனைத்தும் பேரிடர் மற்றும் தொற்று நோய் பரவுதலை தடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் பணிகள் என்பதால் இப்பணிக்கு ரூ.9.98 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இப்பணிகள் அனைத்தும் அவசர அவசிய பயிகள் என்பதால் இப்பயியினை நகராட்சி சட்டம் 1920 விதி 15ன்கீழ் மேற்கொள்ளப்பட்டது.இப்பணிக்கு உண்டான செலவினம் ரூ.9,95,736/—ஐ மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்.1480/2020/இ1

**9**

மேட்டுப்பாளையம் நகராட்சியில் 2020—21 பொதுநிதியின் கீழ் 16.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | நெல்லித்துறை சாலையில் அமைத்துள்ள உலர் கழிவு மையத்திற்கு கூடுதல் வசதிகள் செய்தல் | ரூ.4.00 இலட்சம் | திரு. கே. வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. எம்.வேலுசாமி | 3.26% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.வேலுசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3801/2020/இ1

**10**

மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10ல் உள்ள எஸ்.எம்.நகர் பகுதியில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுந்தடைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு மிகவும் இடையூராக உள்ளது. மேலும் அப்பகுதியில் கழிவுநீர் சரியாக செல்லாத காரணத்தால் அப்பகுதியில் சுகாதார கேடு விலைவிக்கும் அபாயம் உள்ளது. இதனால் பொதுமக்களின் நலன் கருதி இப்பகுதியில் சிறுபாலம் மற்றும் கழிவுநீர் வடிகால்வாய் அமைப்பதற்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இத்தொகையினை பொதுறிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

**11**

மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண். 321 சாந்தி நகர் பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் இடிந்து மிகவும் சேதம் அமைந்துள்ளது.மேலும் இதனால் கழிவுநீர், மழை காலங்களில் அருகில் உள்ள வீடுகளுக்குள் சென்று பொது மக்களுக்கு மிகவும் இடையூராக உள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள மழைநீர் கால்வாயினை புதுப்பிக்க ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இத்தொகையினை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.4620/2020/இ1

**12**

மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5ல் உள்ள வள்ளுவர் நகரவை துவக்கப்பள்ளியில் கழிப்பிடம் போதிய அளவு இல்லாததால் அங்கு புதிதாக கழிப்பிடம் கட்டவும், பழைய வகுப்பறைகளில் வர்ணம் பூசி சில மராமத்துப்பணிகள் மேற்கொள்ளவும் ரூ.9.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியை நகராட்சி கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.

**13** மேட்டுப்பாளையம் நகராட்சி வார்டுஎண்.33, பாரதிநகர் பகுதியில் தண்டுமாரியம்மன் கோவில் எதிரில் உள்ள மழைநீர் வடிகால்வாய் இடிந்து மிகவும் மோசமான நிலையில் உள்ளது. மழைநீர் கால்வாய் இல்லாததால் அங்குள்ள சாலையில் தேங்கி பொதுமக்களுக்கு இடையூராக உள்ளது. எனவே அப்பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

**14** மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட மகாதேவபுரம் 9வது வார்டு ராமசாமி பிள்ளை வீதி2ல் முன்புறம் உள்ள சிறுபாலம் சேதம் அடைந்துள்ளதால் சாக்கடை கழிவுநீர் கால்வாயில் செல்லாமல் மெயின்ரோட்டில் செல்கிறது மற்றம் அருகில் உள்ள வீடுகளுக்குள் செல்கிறது. எனவே அப்பகுதியில் புதிய சிறுபாலம் அமைக்க ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இத்தொகையினை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.4182/2020/இ1

**15** மேட்டுப்பாளையம் நகராட்சி கல்விநிதி 2020–21ன் கீழ் 21.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.29, அன்னூர் ரோடு நகராட்சி துவக்கப்பள்ளியில் மராமத்து பணிகள் செய்தல் | ரூ.2.50 இலட்சம் | திரு. ஜி.கே.எஸ்.சேதுபதி | 4.92% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு. எம்.வேலுசாமி | 7.16% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஜி.கே.எஸ்.சேதுபதி அவர்களின் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.1847/2020/இ1

**16** மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் மூன்று குடிநீர்த் திட்டங்களில் ஆற்று நீரை (Raw water) ராவாட்டரை எடுத்து சுத்தம் செய்து சுத்தநீராக (Clear water) மாற்றி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது ஆற்றிலிருந்து வரும் தண்ணீர் செம்மண் கலந்து வருவதாலும், தற்போது மழைகாலமாக இருப்பதால் ஆற்றில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு தண்ணீர் கலங்கலாக வருவதாலும் செம்மண் நீக்கும் பொருட்டு ஆற்றுநீர் கடினமாக இருப்பதால் ஆற்று நீரின் அழுக்கை நீக்க (கூரசனை) படிகாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது கையிருப்பின் படிகாரம் குறைவாக இருப்பதாலும் இனிவரும் காலங்களில் கூடுதலாக தேவைப்படுவதாலும் (Svephate of Alumino Pernic) 20 டன் படிகாரம் வாங்க உத்தேச செலவினம் 2,40,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் அவசர அவசியம் கருதி , மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதியை பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 004627/2020/இ1

**17** மேட்டுப்பாளையம் நகராட்சி கல்விநிதி 2020–21ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 28.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.20, நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நவீன வகுப்பறை அமைத்தல் | ரூ.5.50 இலட்சம் | M/s.Future ERA | 0.41% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | M/s.Wc Waves Corporations | 7.16% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண். 20, நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல் | ரூ.4.25 இலட்சம் | M/s.Future ERA | 0.15% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | M/s.Wc Waves Corporations | 2.51% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். ப்யூசர் எரா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.4293/2020/இ1

**18** மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர்நிதி 2020–21ன் கீழ் 28.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.31 வெள்ளிப்பாளையம் சாலையில் உள்ள துப்புரவு பணியாளர் குடியிருப்புகளுக்கு குடிநீர் மராமத்து பணிகள் செய்தல் | ரூ.3.00 இலட்சம் | திரு. கே. வேலுசாமி | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு. எம்.வேலுசாமி | 3.16% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.வேலுசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.3800/2020/இ1

**19** மேட்டுப்பாளையம் நகராட்சியில் கல்விநிதி 2020–21ன் கீழ் 28.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.29 அன்னூர் ரோடு நகராட்சி துவக்கப்பள்ளியில் புதியதாக அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் | ரூ.9.90 | திரு. சி.நாகராஜ் | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திருவாளர். ஸ்ரீ ஆஸ்க்சுஷ்மா இன்பராஸ்டரக்சர்ஸ் | 7.46% மதிப்பீட்டிற்கு |

மேற்க்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.நாகராஜ் அவர்களுக்க ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டி வரைவு ஒப்புதலுக்கு

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.4295/2020/இ1

20 மேட்டுப்பாளையம் நகராட்சியில் கல்விநிதி 2020–21ன் கீழ் 28.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.32 மணிநகர் உயர்நிலைப்பள்ளியில் கழிப்பிடம் கட்டுதல் மற்றும் வகுப்பறைகளில் தளம் அமைத்த | ரூ.9.90 | திரு. சி.நாகராஜ் | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திருவாளர். ஸ்ரீ ஆஸ்க்சுஷ்மா இன்பராஸ்டரக்சர்ஸ் | 7.89% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்க்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.நாகராஜ் அவர்களுக்கு ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டி வரைவு ஒப்புதலுக்கு

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.4294/2020/இ1

21 மேட்டுப்பாளையம் நகராட்சியில் கல்விநிதி 2020–21ன் கீழ் 28.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.20 நகரவை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சுற்றுசுவர் அருகில் தளம் அமைத்தல் மற்றும் அங்கன்வாடியில் மராமத்து பணிகள் செய்தல் | ரூ.9.00 இலட்சம் | திரு. வி.செல்வராஜ் | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திரு.என்.ஜெகநாதன் | 7.96% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்க்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.வி.செல்வராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.4291/2020/இ1

22 மேட்டுப்பாளையம் நகராட்சியில் கல்விநிதி 2020–21ன் கீழ் 28.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு% |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.17 வ.உ.சி நகராட்சி துவக்கப்பள்ளி மேம்பாட்டு பணிகள் செய்தல் | ரூ.9.00 | திருவாளர். ஸ்ரீ ஆஸ்க்சுஷ்மா இன்பராஸ்டரக்சர்ஸ் | 4.96% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | | | திருவாளர். சி.நாகராஜ் | 7.86% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்க்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். ஸ்ரீ ஆஸ்க்சுஷ்மா இன்பராஸ்டரக்சர்ஸ்அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டி வரைவு ஒப்புதலுக்கு

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.4513/2020/இ1

| | |
|---|---|
| 23 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் செயல்படுத்தப்பம் திட்ட பணிகள் நலத்திட்டங்கள் குறித்து மக்கள் சாசனம் (Citizen charter) தயார் செய்து மன்ற ஒப்புதலுடன் ஒப்படைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் கடித எண்.564/2020/அ2, நாள்.28.10.2020லில் சொல்லப்பட்ட அறிவுரையின்படி இந்நகராட்சியில் மக்கள் சாசனம் தயார் செய்யப்பட்டு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>ந.க.எண்.4513/2020/இ1 |
| 24 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 27 ஜவஹர்லால் நேரு பேருந்து நிலையத்தில் உள்ள துப்புரவு ஆய்வாளர்களுக்கான வார்டு அலுவலகத்தில் உள்ள தரைதளம் மிகவும் மோசமாக உள்ளது மற்றும் அங்குள்ள மழைநீர் வடிகால்களுக்கு கலர் slab மற்றும் SS Handrails அமைக்க மதிப்பீடு ரூ.4.00 இலட்ம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.4954/2020/இ1 |
| 25 | மேட்டுப்பாளைய்ம நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 32, மணி நகர் நகராட்சி பள்ளியில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் மிகவும் பழுதடைந்து மோசமாக உள்ளது. இப்பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு சிரமமாக உள்ளது எனவே பழைய அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து புதிய அங்கன்வாடி மையம் அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.9.80 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.4953/2020/இ1 |
| 26 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் பம்பின் மெயின் மற்றும் பகிர்மானக்குழாய் உடைப்பு சரி செய்யவும், பொதுக் கழிப்பிடம் மற்றும் பொதுக்குழாய்களுக்குத் தேவையான உதிரிச் சாமன்கள் விநியோகம் செய்யவும் மெயின் உடைப்பிற்குத் தேவையான சாமான்கள் விநியோகம் செய்து பொருத்தவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு** :<br>பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு உடைப்பு சரிசெய்து அவசியம் என்பதால் மேற்படி செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.848/2020/இ1 |
| 27 | மேட்டுப்பாளையம் நகராட்சி பொறியாளர் அதிக அளவில் ஆய்வு கூட்டங்கள் Video Conference முறையில் கலந்து கொள்ள வேண்டியுள்ளதாலும் மற்றும் திட்ட அறிக்கை சமர்ப்பிக்க சென்னை மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களுக்கு எடுத்து செல்ல வேண்டியுள்ளதாலும் பொறியாளருக்கு ஒரு All in one கணினியும், பொறியியல் பிரிவிற்கு ஒரு மடி– கணினிணியும் மற்றும் பொதுபிரிவிற்கு ஒரு கணினி மற்றும் கணக்கருக்கு ஒரு கணினி பிரிட்டர் அவசியாமாக தேவைப்படுவதால் இதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.4.25 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். |